மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், இராமேஸ்வரம்
EP.No.1/2017 in OS.No.102/2002

2024-ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 15-ம் நாள் இந்திய ஆணையுறுதி சட்டம் பிரிவு 3 மற்றும் 4-ன் படி வாதி/பிரதிவாதி என்பவரை சாட்சியத்தின் வாக்குமூலம் சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரிக்கப்பட்டார்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | தில்லை சேதுபதி (RW1) | த/பெ. | : | |
| கிராமம் | : | | தாலுகா | : | |
| சமயம் | : | | ஜாதி | : | |
| வயது | : | | தொழில் | :: | |

<u>நாள்.15.02.2024</u>
<u>எ.ம.சா.1</u>
**<u>5ம் எதிர்மனுதாரர் /3ம் தரப்பினர் சாட்சி முதல் விசாரணை:</u>**

நான் சமூகம் நீதிமன்ற மதுரை கிளை உத்தரவு Crl.P.2193/2022ன் ஏற்பட்ட உத்தரவின் படி 5ம் எதிர்மனுதாரர்/3ம் தரப்பினர் சார்பாக இந்த நிறைவேற்றுதல் மனுவில் சாட்சியம் பதிவு செய்யப்பட்டது.

நான் 5ம் எதிர்மனுதாரர் ஆகிய ஜெயந்தி மலாவின் கணவர் ஆவேன். அசல் நிறைவேற்றுதல் மனுவில் எனது தரப்பு சாட்சியத்தை நிரூபண வாக்குமூலம் எனது மனைவிக்காக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அதிலுள்ள கையொப்பம் என்னுடையதுதான். அதை நான் சொல்லிதான் தயார் செய்யப்பட்டது. அதிலுள்ள விபரம் எல்லாம் எனக்கு தெரியும்.

5ம் எதிர்மனுதாரர்/3ம் தரப்பினர் கீழ்க்கண்ட ஆவணங்கள் குறியீடு செய்யப்படுகிறது.

1. 11.10.2001-ம் தேதி தாவா சொத்திற்கு மேற்கே உள்ள சொத்தினை எனது தகப்பனாரிடமிருந்து 5ம் எதிர்மனுதாரர் கிரையம் பெற்ற கிரைய ஆவணம் சார்பதிவாளர் நகல் எ.மா.சா.ஆ.1 ஆகும்.
2. 21.09.2017-ம் தேதியில் 5ம் எதிர்மனுதாரர் அவரது வழக்கறிஞர் மூலம் இராமநாதபுரம் வருவாய் கோட்டாட்சியர் மற்றும் வட்டாட்சியருக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு அலுவலக நகல் எ.மா.சா.ஆ.2 ஆகும்.
3. மேற்படி அறிவிப்பை வருவாய் கோட்டாட்சியர் பெற்றுக்கொண்டதற்கான அஞ்சலக திரும்பிய ரசீது எ.மா.சா.ஆ.3 ஆகும்.

4. மேற்படி அறிவிப்பை வட்டாட்சியர் பெற்றுக்கொண்டதற்கான அஞ்சலக திரும்பிய ரசீது எ.மா.சா.ஆ.4 ஆகும்.

5. மனுதார் 5ம் எதிர்மனுதாரர் மீது தாக்கல் செய்த கேவியட் மனு நகல் எ.மா.சா.ஆ.5 ஆகும்.

6.03.06.2017-ம் தேதி மேற்படி கேவியட் மனுவிற்கு 5ம் எதிர்மனுதாரர் வழககறிஞர் மூலம் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு அலுவலக நகல் எ.மா.சா.ஆ.6 ஆகும்.

7. மேற்படி அறிவிப்பை மனுதாரர் பெற்றுற்கொண்டதற்கான அஞ்சலக அட்டை எ.மா.சா.ஆ.7 ஆகும்.

8. தாவா சொத்து வழக்கு சமயத்தில் இருந்ததை காட்டுவதற்கான புகைப்படம்-2 CDயுடன் எ.மா.சா.ஆ.8 ஆகும்.

9. தாவா சொத்தின் கிழக்கே காம்பவுண்ட் சுவர் கட்டப்படும்போது எடுக்கப்பட்ட புகைப்படம் -2 CDயுடன் எ.மா.சா.ஆ.9 ஆகும்.

10. இராமநாதபுரம் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் 1ம் மனுதாரர் தாக்கல் செய்த அ.வ.எண்.102/2002 வழக்கில் தாக்கல் செய்த பிராது சான்றிட்ட நகல் எ.மா.சா.ஆ.10 ஆகும்.

11. இராமநாதபுரம் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் 2ம் மனுதாரர் தாக்கல் செய்த அ.வ.எண்.102/2002 வழக்கில் தாக்கல் செய்த எதிர்வழக்குரை சான்றிட்ட நகல் எ.மா.சா.ஆ.11 ஆகும்.

12. இராமநாதபுரம் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அ.வ.எண்.102/2002 ஏற்பட்டுள்ள தீர்ப்புரை சான்றிட்ட நகல் எ.மா.சா.ஆ.12 ஆகும்.

13. இராமநாதபுரம் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அ.வ.எண்.102/2002 வழக்கில் ஆணையர் தாக்கல் செய்த அறிக்கை மற்றும் வரைபடம் நீதிமன்றம் சான்றிட்ட நகல் எ.மா.சா.ஆ.13 ஆகும்.

குறுக்குவிசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது.

ஒம்/-S.இளையராஜா,
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர்,
இராமேஸ்வரம்